# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல்கள் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

***web : www.slelections.gov.lk e-mail : info@slelections.gov.lk***


මගේ අංකය :
எனது இல: PE/2020/12

ඔබේ අංකය :
உமது இல.

දිනය :
திகதி: 2020.06.18

**போட்டியிடுகின்ற அனைத்து அரசியற் கட்சிகளினதும் செயலாளர்கள் / அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்கள் ஆகியோருக்கு**

> **அலுவலகத்தின் பெயர்ப்பலகைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் 3 ஆம் பக்கத்திலுள்ள 8 ஆம் பந்தியில் உள்ளது.**

## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களுக்கான மட்டுப்பாடுகள்

2020 ஆகஸ்ட் 05 ஆம் திகதி நடாத்தப்படவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரச்சார அலுவலகங்களை அமைக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்களின்பால் தங்களது கவனத்தை ஈர்க்கும் முகமாக இந்தக் கடிதம் அனுப்பப்படுகின்றது.

02. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் நடாத்திச் செல்லக்கூடிய தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் தொடர்பான ஏற்பாடுகள் பின்வருமாறாகும்.

"73(1) ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் தேர்தலொன்றில், அதிகாரமளிக்கப்பட்ட முகவராக அல்லது குழுத்தலைவராக உள்ள அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத்தலைவரின் முகவராக உள்ள ஆளொருவர்,

(அ) அத்தகைய தேர்தலின் நியமனக் காலப்பகுதியின் முதலாம் நாளன்று தொடங்குவதும், அத்தகைய தேர்தலில் வாக்கெடுப்பு நடைபெறும் தேதிக்கு நேர்முன்னரான நாளில் முடிவடைவதுமான காலப்பகுதியின் போது, **அத்தேர்தல் மாவட்டத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு மத்திய தேர்தல் அலுவலகமும், அத்துடன் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு கிளைத் தேர்தல் அலுவலகமும்** தவிர்ந்த ஏதேனும் தேர்தல் அலுவலகத்தை வைத்திருத்தலாகாது.

(ஆ) அத்தகைய வாக்கெடுப்புத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று தொடங்குவதும், அத்தகைய தேதியை உடனடுத்து வரும் நாளன்று முடிவடைவதுமான காலப்பகுதியின் போது **தேர்தல் மாவட்டத்தில் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு மத்திய தேர்தல் அலுவலகமும், அத்துடன் அத்தேர்தல் மாவட்டத்துக்கென ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பிலும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒரு கிளைத் தேர்தல் அலுவலகமும்** தவிர்ந்த ஏதேனும் தேர்தல் அலுவலகத்தை வைத்திருத்தலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட முகவரின் அல்லது குழுத்தலைவரின் அல்லது வேட்பாளரின் சாதாரணமான வதிவிடத்தைத் தேர்தல் அலுவலகமொன்றாகப் பயன்படுத்துதல் அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுவதாகாதெனக் கருதப்படுதல் வேண்டும்."

03. இதற்கிணங்க நான்கு (4) வகையான பிரச்சார அலுவலகங்களை வைத்திருக்க முடியுமென்பதுடன், அவ்வலுவலகங்களை எவ்வாறு தாபிக்க வேண்டுமென கீழே காட்டப்பட்டுள்ளது.

***1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73ஆம் பிரிவின் கீழ் அலுவலகங்களை தாபித்தல் தொடர்பான விபரக் குறிப்பு**

| நடாத்திச் செல்லக்கூடிய அலுவலகங்களின் வகைகள் | அலுவலகத்தை நடாத்திச் செல்ல அதிகாரம் உள்ளவர்கள் | அலுவலகத்தை நடாத்திச் செல்லக்கூடிய காலப்பகுதி | அலுவலகம் நடாத்திச் செல்லக்கூடிய அதிகார எல்லைப் பிரதேசம் | நடாத்திச் செல்லக்கூடிய அலுவலகங்களின் எண்ணிக்கை | விண்ணப்பப் பத்திரத்தின் நிறம் |
|---|---|---|---|---|---|
| அறிவிக்கப்பட்ட மத்திய தேர்தல் அலுவலகம் | கட்சிச் செயலாளர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்/சுயேச்சைக் குழுத்தலைவர் அல்லது வேறு முகவர் | 2020.06.10ஆம் திகதியிலிருந்து 2020.08.06 ஆம் திகதி நள்ளிரவு வரை | தேர்தல் மாவட்டஅதிகார எல்லைப் பிரதேசம் | ஒரு அலுவலகம் மாத்திரம் | மஞ்சள் |
| அறிவிக்கப்பட்ட கிளைத் தேர்தல் அலுவலகம் (i) | கட்சிச் செயலாளர்/ அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர்/சுயேச்சைக் குழுத்தலைவர் அல்லது வேறு முகவர் | 2020.06.10ஆம் திகதியிலிருந்து 2020.08.03ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டம் | வாக்கெடுப்பு மாவட்டம் ஒன்றுக்கு ஒன்று என்ற வீதம் | வெள்ளை |
| அறிவிக்கப்பட்ட கிளைத் தேர்தல் அலுவலகம் (ii) | வேட்பாளர் | 2020.08.04ஆம் திகதியிலிருந்து 2020.08.06ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் | ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு ஒன்றென்ற வீதம் | இளம் சிவப்பு |
| சாதாரண வதிவிடம், தேர்தல் அலுவலகமாகப் பயன்படுத்தல் | அதிகாரம் அளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர் / வேட்பாளர் | 2020.06.10ஆம் திகதியிலிருந்து 2020.08.06ஆம் திகதி நள்ளிரவு வரை | ஒவ்வொரு வேட்பாளரினதும் வதிவிடம் | ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு ஒன்றென்ற வீதம் | இளம் ஊதா |

விடயங்களைத் தெளிவுபடுத்துதல்

I. **தேர்தல் மாவட்டம்**

இலக்கம் 1 - கொழும்பு தேர்தல் மாவட்டத்திலிருந்து இலக்கம் 22 - கேகாலை தேர்தல் மாவட்டம் வரையிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களும் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று நிருவாக மாவட்டங்களுக்குமுரிய அதிகார எல்லைப் பிரதேசம் இலக்கம் 11 - வன்னி தேர்தல் மாவட்டமெனவும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு நிருவாக மாவட்டங்களுக்குமுரிய அதிகார எல்லைப் பிரதேசம் இலக்கம் 10 - யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டமெனவும் அழைக்கப்படுவதுடன், அம்பாறை நிருவாக மாவட்டம் இலக்கம் 13 - திகாமடுல்ல தேர்தல் மாவட்டமெனவும், ஏனைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டமும் உரிய நிருவாக மாவட்டத்தின் பெயரால் அழைக்கப்படுகின்றது.

II. **வாக்கெடுப்புப் பிரிவு**

கொழும்பு வடக்கு, மத்துகம, இரத்தோட்டை, அம்பலாங்கொடை போன்ற பழைய தேர்தல் மாவட்டங்கள் வாக்கெடுப்புப் பிரிவுகளாக அழைக்கப்படுகின்றது. முழுத்தீவுக்குமாக 160 வாக்கெடுப்புப் பிரிவுகள் உள்ளன.

III. **வாக்கெடுப்பு மாவட்டங்கள்**

ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான தகைமையைப் பெற்றுள்ள வாக்காளர்கள் வதிகின்ற பிரதேசம் வாக்கெடுப்பு மாவட்டம் என அழைக்கப்படுகின்றது. ஒரு வாக்கெடுப்புப் பிரிவினுள் பல வாக்கெடுப்பு மாவட்டங்கள் இருப்பதுடன், அவை 1ஆம் இலக்கத்திலிருந்து தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்தின் பிரகாரம் தேருநர் இடாப்பை பிரித்தொதுக்க முடியும். நாட்டில் மொத்தமாக 12,774 வாக்கெடுப்பு மாவட்டங்கள் உள்ளன.

IV. **அதிகாரமளிக்கப்பட்ட முகவர்**

தேர்தல் மாவட்டம் ஒன்றிற்காகப் போட்டியிடுகின்ற ஏதேனுமொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் கையளிக்கப்படுகின்ற வேட்புமனுப் பத்திரத்தில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் (15(4) ஆம் உறுப்புரை).

V. **சுயேச்சைக் குழுத் தலைவர்**

தேர்தல் மாவட்டம் ஒன்றிற்காகப் போட்டியிடுகின்ற சுயேச்சைக் குழுவொன்று தொடர்பான வேட்புமனுப் பத்திரத்தில் முதலாவதாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர் (15(3) ஆம் உறுப்புரை)

04. இவ்வொவ்வோர் அலுவலகமும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களாக இருக்க வேண்டுமென்பதுடன், **"அறிவித்தல் கொடுக்கபட்ட"** என்னும் சொற்றொடர் **அவ்விடப்பிரதேசத்துக்கான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கும், அந்த அலுவலகம் எந்த தேர்தல் மாவட்டத்தில் அமைந்துள்ளதோ, அந்தத் தேர்தல் மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி அலுவலருக்கும், அத்தகைய அலுவலகமானது தாபிக்கப்படுவதற்கு முன்னர், அறிவித்தல் கொடுக்கப்பட்டது** எனப் பொருள்படும். அவ்வாறு அறிவிப்பதற்காக இத்தோடு இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் உரிய மாதிரிப் படிவத்தை ஒவ்வோர் அலுவலகம் சார்பாகவும் நான்கு (4) பிரதிகளில் பூர்த்தி செய்து, இதில் ஒரு பிரதி தெரிவத்தாட்சி அலுவலர் / மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு, எஞ்சிய மூன்று பிரதிகளில் ஒன்றை உரிய பொலிஸ் நிலையத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மற்றைய பிரதி சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகததிற்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய பிரதி குறித்த அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

05. அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு அல்லது சுயேச்சைக் குழுத் தலைவருக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு தனது வதிவில்லத்தில் அல்லது வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ள இல்லத்தில் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்றை அமைப்பதற்கான உரிமையுள்ளது..

06. மேலும் இத்தகைய தேர்தல் பிரச்சார அலுவலகங்களுக்கு முன்னாலோ அல்லது அருகிலோ பொதுப் பாதைகளில் வாகன நெரிசல் ஏற்படத்தக்கவாறு இன்றேல் பொதுமக்களுக்குத் தடங்கல்கள் ஏற்படத்தக்கவாறு வாகனங்களை நிறுத்தி வைப்பதையும், ஆதரவாளர்கள் பெருந்தொகையானோரை ஒன்று திரட்டுவதையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டுமென்பதோடு, அலுவலகத்தைப் பரிசீலிப்பதற்காக வருகை தருகின்ற பொலிஸ் அலுவலர்களுக்கு ***இடையூறு விளைவித்தல் தேர்தலை நடாத்துவதற்கு விளைவிக்கப்பட்ட இடையூறாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.***

07. சமய வழிபாட்டுத் தலங்களுக்குரிய காணிகளில் அல்லது கட்டிடங்களில் தேர்தல் அலுவலகங்கள் அமைக்கப்படுமாயின் அதற்கான விசேட அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன், அவ்வாறான இடங்களில் தேர்தல் பிரச்சார அலுவலகங்கள் அமைப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

08. உரியவாறு மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் (இச்சந்தர்ப்பத்தில் சுகாதார வைத்தி அதிகாரி அலுவலகம் (MOH அலுவலகம்) ஆகியவற்றிற்கு அறிவித்து அமைக்கப்படவுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் கட்சியின் பெயர் / சுயேச்சைக் குழுவாயின் "சுயேச்சைக் குழு இலக்கம் -...." எனவும், கட்சியின் / குழுவின் சின்னம் என்பன மாத்திரம் அடங்கிய ஒரேயொரு பெயர்ப் பலகை காட்சிப்படுத்தப்படலாம். அப்பெயர்ப்பலகை ஒரு மொழியில் மாத்திரமெனின் 40 சதுர அடிகளை விஞ்சாதவாறு அமைதல் வேண்டுமென்பதுடன், இரு அரச மொழிகளையும் பயன்படுத்துவதாயின் (சிங்களம், தமிழ்) மேலதிகமாக 10 சதுர அடிகளைக் கூட்டிக் கொள்ளலாம். அப்பெயர்ப்பலகையைத் தவிர வேறு கட்சியின் / குழுவின் சின்னம் போன்றவற்றைக் காட்சிப்படுத்தல் சட்டமுரணானது.

9. கொவிட் 19 தொற்று காரணமாக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, அனைத்து கட்சி அலுவலகங்களுக்கும் முன்பாக உள்ள நுழைவாயில்களில் கைகழுவுவதற்காக அல்லது கிருமிநீக்கம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கட்சி அலுவலகத்திற்கு வருகை தரும் அனைத்து ஆதரவாளர்களதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களுடன் அவர்களது கையொப்பத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆவணமொன்றை நடாத்திச் செல்வதுடன் அதனை தினமும் நிகழ்காலப்படுத்துதல் வேண்டும். கொவிட் 19 தொற்று ஒருவருக்கு ஏற்பட்டால் சுகாதார வைத்திய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே இந்த ஆவணம் தேவைப்படுகின்றது. பொலிஸ், பாதுகாப்புப் பிரிவு, தேர்தல் அலுவலகம் போன்றவற்றிற்கு அவசியப்படமாட்டாது.

10. எப்பொழுதும் பிரச்சார அலுவலக வளாகத்தினுள் நடமாடும் ஆதரவாளர்கள் தமக்கிடையே ஒரு மீட்டர் தூர இடைவெளியைப் பேணுவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன், அவ்வலுவலகத்தினுள் சீட்டாட்டம், கரம் விளையாட்டு, தாம் விளையாட்டு போன்றவற்றில் ஈடுபடுதலாகாது. அத்துடன் வாய், மூக்கு ஆகியன மூடியிருக்கும் வகையில் முகக்கவசம் அணிந்திருத்தலும் வேண்டும். அத்துடன் கட்சி அலுவலகத்தினுள் சிறந்த காற்றோட்டம் வரும் வகையில் கதவு, ஜன்னல்களைத் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

11. எந்தவொரு கட்சி அலுவலகத்திலும் நாட்டின் பொதுச் சட்டங்கள், தேர்தல் சட்டங்கள் மற்றும் கொவிட் 19 தொற்று நிலைமையின் கீழ் தேர்தல் நடாத்தப்படுவது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் ஆகியவை மீறப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாகாதென்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

**12. மேலே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றை விதிக்க வேண்டியிருப்பது, தேர்தல் காலஎல்லைக்குள் தேர்தலோடு தொடர்புடைய பிணக்குகள், தாக்குதல்கள், காயப்படுத்தல்கள், மனிதக் கொலைகள் மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் போன்ற முறையற்ற நடத்தைகளைத் தடுப்பதற்கும் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்களைத் தவிர்ப்பதற்கும், கொவிட் 19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அனைவரினதும் பொறுப்பாகுமென்பதும், அவ்வாறான செயற்படுகள் மூலம் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சூழலொன்றை உருவாக்கிக் கொள்வதற்குமேயாகும்.**

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு

பிரதிகள் -

1. தேர்தல் ஆணையாளர் நாயகம் / செயலாளர், தேர்தல் ஆணைக்குழு - உரிய நடவடிக்கைகளுக்காக.
2. பொலிஸ் மாஅதிபர் - அறிந்து கொள்வதற்கும், உரிய அலுவலர்களைத் தெளிவூட்டுவதற்கும்.
3. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - அறிந்து கொள்வதற்கும், உரிய நடவடிக்கைகளுக்காகவும்.
4. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் - அறிந்து கொள்வதற்கும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்குழு மற்றும் பொலிஸ் அலுவலர்கள் ஊடாக இந்தக் கட்டளையை வலுவாக்குவதற்கும்.
5. சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிர்வாகம் மற்றும் தேர்தல்கள்) - அறிந்து கொள்வதற்கும், உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும்.
6. தலைமையலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் - அறிந்து கொள்வதற்காக மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடி குறித்த கட்டளைகள் மீறப்படுவதனைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும்.
7. அனைத்து மாவட்ட பிரதி / உதவித் தேர்தல் ஆணையாளர்கள் - தேர்தல் சட்டங்கள் மீறுவது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அலுவலர்கள்
   - அறிந்து கொள்வதற்கும், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், சுயேச்சைக் குழுத் தலைவர்களை அறிவுறுத்தி இக்கடிதத்தின் பிரதியை அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையெடுப்பதற்கும். தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடி குறித்த கட்டளைகள் மீறப்படுவதனைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும்.
8. தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்கான நிலையியல் குழுவின் மற்றும் அரசியற் கட்சிகளின் நிரந்தர முகவர்களுக்கு - அறிந்து கொள்வதற்கும், உரிய நடவடிக்கையெடுப்பதற்கும்.
9. கண்காணிப்பு அமைப்புக்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கு - அறிந்து கொள்வதற்கும், உரிய நடவடிக்கையெடுப்பதற்கும்.

.................................................................................................................

(அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர்)

கட்சியின் பெயர்/ சுயேச்சைக் குழு இலக்கம் ........................................

முகவரி : ...............................................................................................

.................................................................................................................

நான்கு பிரதிகளில் நிரப்பி ஒரு பிரதியை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கும், மற்றொரு பிரதி உரிய பொலிஸ் நிலையத்திற்கும், மூன்றாம் பிரதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் கையளித்தல் வேண்டும். எஞ்சிய பிரதியை தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

*(நிரப்ப முன்னர் பின்பக்கத்தின் அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.)*

2020........................

**தெரிவத்தாட்சி அலுவலர்,** ........................................................................ மாவட்டம்

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், ..............................................

சுகாதார வைத்திய அதிகாரி ...............................................................................

| அலுவலக உபயோகத்திற்கு | |
|---|---|
| வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து | வா.மா. இலக்கம் |
| | |

## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நிறுவுதல்

1. அலுவலகத்தின் வகையீடு : **அறிவிக்கப்பட்ட மத்திய தேர்தல் பிரச்சார அலுவலகம்.**

2. அலுவலகத்தின் அமைவிடமும், உரிய காணியின் உரிமையும்.

2.1 தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் முகவரி:..........................................................................

.................................................................................................................

2.2 மேற்குறித்த முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு:...........................................................

2.3 அம்முகவரிக்குரிய வாக்கெடுப்பு நிலையம் :....................................................................

2.4 அம்முகவரியின் உரித்துரிமை

(இந்த வளவு ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச் சட்ட நிறுவனத்திற்கோ உரித்தற்றதாதல் வேண்டும்.)

2.4.1 உரித்தாளியின் பெயர் :...........................................................................

2.4.2 அவரின் அஞ்சல் முகவரி: ........................................................................

.................................................................................................

2.4.3 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம் : வீடு- ..................................கையடக்க- ...................................

3. **வெளிப்படுத்துகை**

மேற்குறித்த தகவல்கள் கூறப்பட்ட இடத்தில் தேர்தலுடன் தொடர்புடைய...................................கட்சியின்/ சுயேச்சைக் குழுவின் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்றை நடாத்தி வருவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக சுகாதார அலுவலர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவேனெனவும், தேர்தல் சட்டங்களை மீறாத வகையிலும் நடாத்திச் செல்வேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.................................................................................

அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/ சுயேச்சைக் குழுத் தலைவர்/ முகவரின் பெயர்

கையொப்பம் :...................................... திகதி : ............................ பதவி முத்திரை :

*** அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் / சுயேச்சைக் குழுத் தலைவரால் இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

### அலுவலகம் நிறுவப்படுகின்ற பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை

அலுவலக முகவரி: - ..........................................................

..........................................................

..........................................................

தேர்தல் பிரச்சார அலுவலகத்தினை நிறுவுவதோடு தொடர்புடைய வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் .................... எனவும் அந்த வளவு எந்தவோர் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச்சட்ட நிறுவனத்திற்கோ உரித்தான ஒன்றல்ல எனவும் அறிவிக்கின்றேன்.

...................................................

கிராம அலுவலர் கையொப்பம் திகதி : ..................

பதவி முத்திரை

பிரதியை பெற்றுக் கொள்ளல்

| நிலையம் | பெற்றுக்கொண்டவரின் பெயர் / பதவி | கையொப்பம் | அலுவலக பதவி முத்திரை |
|---|---|---|---|
| மாவட்ட தேர்தல் அலுவலகம் ........................ | ........................................... | | |
| பொலிஸ் நிலையம் ........................ | ........................................... | | |
| சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ........................... | ........................................... | | |

அறிவுறுத்தல்கள் :

1. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவில் தேர்தல்கள் அலுவலகங்களை நிறுவுவதற்கான சட்ட ஏற்பாடுகள் காட்டப்பட்டுள்ளன. உரியவாறு மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் (இச்சந்தர்ப்பத்தில் சுகாதார வைத்தி அதிகாரி அலுவலகம் (MOH அலுவலகம்) ஆகியவற்றிற்கு ***அறிவித்து*** அமைக்கப்படவுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் கட்சியின் பெயர் (சுயேச்சைக் குழுவாயின் "சுயேச்சைக் குழு இலக்கம் - ") எனவும், கட்சியின் / சுயேச்சைக் குழுவின் சின்னம் என்பன மாத்திரம் அடங்கிய ஒரேயொரு பெயர்ப் பலகை (பதாகை) காட்சிப்படுத்தப்படலாம். அப்பெயர்ப்பலகை ஒரு மொழியில் மாத்திரமெனின் 40 சதுர அடிகளை விஞ்சாதவாறு அமைதல் வேண்டுமென்பதுடன், இரு அரச மொழிகளையும் பயன்படுத்துவதாயின் (சிங்களம், தமிழ்) மேலதிகமாக 10 சதுர அடிகளைக் கூட்டிக் கொள்ளலாம்.

2. பொலிசார் அல்லது எவரேனும் அதிகாரி வருகை தந்து கோருகின்ற போது அலுவலகத்தை நிறுவுவதற்கென அனுமதியளிக்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக அதன் ஒருபிரதி அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, உரிய தேர்தல் பிரச்சார அலுவலகத்தை அகற்ற நடவடிக்கையெடுக்கப்படும்.

3. அலுவலகத்தை நிறுவ வேண்டிய விதமும் நடாத்திச் செல்ல வேண்டிய காலப்பகுதியும் வருமாறு:

| | | |
|---|---|---|
| **அறிவிக்கப்பட்ட மத்திய தேர்தல் பிரச்சார அலுவலகம்** | **ஒரு அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு அல்லது சுயேச்சைக் குழுத் தலைவருக்கு தேர்தல் மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதம்** | **2020.06.10ஆம் திகதி முதல் 2020.08.06ஆம் திகதி நள்ளிரவு வரை** |

4.. இத்தகைய அறிவிக்கப்பட்ட மத்திய தேர்தல் பிரச்சார அலுவலகமொன்று வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து 500 மீற்றருக்குள் அமையப் பெற்றிருப்பின் அதனை 2020.08.03 ஆம் திகதி நள்ளிரவிற்கு முன்னர் அகற்றுதல் வேண்டும்.

5. ஏதேனுமொரு கட்சி / குழுவுக்காக நிறுவப்படுகின்ற அலுவலகத்திற்குள் வேறொரு கட்சி / குழுவின் வேட்பாளரது பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது.

6. சுகாதார அலுவலர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.
   - I வாய் மற்றும் மூக்கு ஆகியவை மூடப்படும் வகையிலான முகக்கவசம் அணிதல் வேண்டும்.
   - II தனியாள் இடைவெளி என்னும் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணுதல் வேண்டும்.
   - III சுவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவுதல் அல்லது கிருமிநீக்கத் திரவம் பயன்படுத்து கைகளைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

............................................................................................................................................
அதிகாரமளிக்கப்பட்ட முகவர்/ சுயேச்சைக் குழுத் தலைவர்/ முகவரின் பெயர்)

கட்சியின் பெயர் / சுயேச்சைக் குழு இலக்கம் -..............................................

முகவரி : ....................................................................................................

....................................................................................................

> நான்கு பிரதிகளில் நிரப்பி ஒரு பிரதியை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கும், மற்றொரு பிரதி உரிய பொலிஸ் நிலையத்திற்கும், மூன்றாம் பிரதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் கையளித்தல் வேண்டும். எஞ்சிய பிரதியை தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

*(நிரப்ப முன்னர் பின்பக்கத்தின் அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.)*

2020........................

**தெரிவத்தாட்சி அலுவலர்,** .............................................................. மாவட்டம்

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், ..............................................................

சுகாதார வைத்திய அதிகாரி ..............................................................................

| அலுவலக உபயோகத்திற்கு | |
|---|---|
| வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து | வா.மா. இலக்கம் |
| | |

## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நிறுவுதல்

1. அலுவலகத்தின் வகையீடு : **அறிவிக்கப்பட்ட கிளை தேர்தல் பிரச்சார அலுவலகம்**

**2020.08.03 ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் அகற்றுதல் வேண்டும்.**

2. அலுவலகத்தின் அமைவிடமும், உரிய காணியின் உரிமையும்.

2.1 தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் முகவரி:....................................................................................
....................................................................................................

2.2 மேற்குறித்த முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு:....................................................................

2.3 அம்முகவரிக்குரிய வாக்கெடுப்பு நிலையம் :....................................................................

2.4 அம்முகவரியின் உரித்துரிமை

(இந்த வளவு ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச் சட்ட நிறுவனத்திற்கோ உரித்தற்றதாதல் வேண்டும்.)

2.4.1 உரித்தாளியின் பெயர் : ....................................................................

2.4.2 அவரின் அஞ்சல் முகவரி: ....................................................................
....................................................................

2.4.3 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம் : வீடு- ..................................கையடக்க- ..............................

3. **வெளிப்படுத்துகை**

மேற்குறித்த தகவல்கள் கூறப்பட்ட இடத்தில் தேர்தலுடன் தொடர்புடைய.................................................. கட்சியின்/ சுயேச்சைக் குழுவின் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்றை நடாத்தி வருவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக சுகாதார அலுவலர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவேனெனவும், தேர்தல் சட்டங்களை மீறாத வகையிலும் நடாத்திச் செல்வேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

....................................................................................................
அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர்/ முகவரின் பெயர்

கையொப்பம் :.................................... திகதி : .................................... பதவி முத்திரை :

### அலுவலகம் நிறுவப்படுகின்ற பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை

அலுவலக முகவரி: -....................................................
....................................................
....................................................

தேர்தல் பிரச்சார அலுவலகத்தினை நிறுவுவதோடு தொடர்புடைய வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் ................................ எனவும் அந்த வளவு எந்தவோர் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச்சட்ட நிறுவனத்திற்கோ உரித்தான ஒன்றல்ல எனவும் அறிவிக்கின்றேன்.

........................................................
கிராம அலுவலர் கையொப்பம் திகதி : ..................

பதவி முத்திரை

பிரதிகளை பெற்றுக் கொள்ளல்

| நிலையம் | பெற்றுக்கொண்டவரின் பெயர் / பதவி | கையொப்பம் | அலுவலக பதவி முத்திரை |
|---|---|---|---|
| மாவட்ட தேர்தல் அலுவலகம் ...................... | ...................................... | | |
| பொலிஸ் நிலையம் ...................... | ...................................... | | |
| சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ...................... | ...................................... | | |

**அறிவுறுத்தல்கள் :**

1. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவில் தேர்தல்கள் அலுவலகங்களை நிறுவுவதற்கான சட்ட ஏற்பாடுகள் காட்டப்பட்டுள்ளன. உரியவாறு மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் (இச்சந்தர்ப்பத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் (MOH அலுவலகம்) ஆகியவற்றிற்கு ***அறிவித்து*** அமைக்கப்படவுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் கட்சியின் பெயர் (சுயேச்சைக் குழுவாயின் “சுயேச்சைக் குழு இலக்கம் - ”) எனவும் கட்சியின் / குழுவின் சின்னம் என்பன மாத்திரம் அடங்கிய ஒரேயொரு பெயர்ப் பலகை (பதாகை) காட்சிப்படுத்தப்படலாம். அப்பெயர்ப்பலகை ஒரு மொழியில் மாத்திரமெனின் 40 சதுர அடிகளை விஞ்சாதவாறு அமைதல் வேண்டுமெனபதுடன், இரு அரச மொழிகளையும் பயன்படுத்துவதாயின் (சிங்களம், தமிழ்) மேலதிகமாக 10 சதுர அடிகளைக் கூட்டிக் கொள்ளலாம்.

2. பொலிசார் அல்லது எவரேனும் அதிகாரி வருகை தந்து கோருகின்ற போது அலுவலகத்தை நிறுவுவதற்கென அறிவிக்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக ஒரு பிரதி அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, உரிய தேர்தல் பிரச்சார அலுவலகத்தை அகற்ற நடவடிக்கையெடுக்கப்படும்.

3. அலுவலகத்தை நிறுவ வேண்டிய விதமும் நடாத்திச் செல்ல வேண்டிய காலப்பகுதியும் வருமாறு:

| | | |
|---|---|---|
| **அறிவிக்கப்பட்ட கிளைத் தேர்தல் பிரச்சார அலுவலகம்** | **ஓவ்வொரு கட்சிக்கும் அல்லது சுயேச்சைக் குழுவுக்கும் ஒரு வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதம்** | **2020.06.10 ஆம் திகதி முதல் 2020.08.03 ஆம் திகதி நள்ளிரவு வரை** |

4.. இத்தகைய அறிவிக்கப்பட்ட கிளைத் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்று வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து 500 மீற்றருக்குள் அமையப் பெற்றிருப்பின் அதனை 2020.08.03 ஆம் திகதி நள்ளிரவிற்கு முன்னர் அகற்றுதல் வேண்டும்.

5. ஏதேனுமொரு கட்சி / குழுவுக்காக நிறுவப்படுகின்ற அலுவலகத்திற்குள் வேறொரு கட்சி / குழுவின் வேட்பாளரது பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது.

6. சுகாதார அலுவலர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.
   - I வாய் மற்றும் மூக்கு ஆகியவை மூடப்படும் வகையிலான முகக்கவசம் அணிதல் வேண்டும்.
   - II தனியாள் இடைவெளி என்னும் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணுதல் வேண்டும்.
   - III சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவுதல் அல்லது கிருமிநீக்கத் திரவம் பயன்படுத்தி கைகளைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

..................................................................................................................................

, அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவரின் பெயர்

கட்சியின் பெயர் / சுயேச்சைக் குழு இலக்கம் -..........................................................

முகவரி : ..................................................................................................................

..................................................................................................................................

தொலைபேசி இலக்கம் :...................................................................................

நான்கு பிரதிகளில் நிரப்பி ஒரு பிரதியை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கும், மற்றொரு பிரதி உரிய பொலிஸ் நிலையத்திற்கும், மூன்றாம் பிரதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் கையளித்தல் வேண்டும். எஞ்சிய பிரதியை தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

*(நிரப்ப முன்னர் பின்பக்கத்தின் அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.)*

2020........................

| அலுவலக உபயோகத்திற்கு | |
|---|---|
| வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து | வா.மா. இலக்கம் |
| | |

**தெரிவத்தாட்சி அலுவலர்,** ............................................................................................. மாவட்டம்

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், ............................. (உரிய பொலிஸ் நிலையம்)

சுகாதார வைத்திய அதிகாரி .........................................................................................

## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நிறுவுதல்

1. அலுவலகத்தின் வகையீடு :

**ஒவ்வொரு வேட்பாளருக்கும் தேர்தல் மாவட்டத்திற்காக அறிவிக்கப்பட்ட கிளைத் தேர்தல் பிரச்சார அலுவலகம்**

**2020.08.04, 05, 06 ஆம் திகதிகளில் மாத்திரம்.**

2. அலுவலகத்தின் அமைவிடமும், உரிய காணியின் உரிமையும்.

2.1 தேர்தல் பிரச்சார அலுவலகத்தின் முகவரி:..............................................................................

..................................................................................................................................

2.2 மேற்குறித்த முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு:.................................................................

2.3 அம்முகவரிக்குரிய வாக்கெடுப்பு நிலையம் :..............................................................................

2.4 அம்முகவரியின் உரித்துரிமை

(இந்த வளவு ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச் சட்ட நிறுவனத்திற்கோ உரித்தற்றதாதல் வேண்டும்.)

2.4.1 உரித்தாளியின் பெயர் : ...........................................................................................

2.4.2 அவரின் அஞ்சல் முகவரி: ...........................................................................................

2.4.3 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம் : வீடு- ...............................................கையடக்க- ....................................

3. **வெளிப்படுத்துகை**

மேற்குறித்த தகவல்கள் கூறப்பட்ட இடத்தில் தேர்தலுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர் ஆகிய வணக்கத்திற்குரிய / திரு / திருமதி....................................................................................... அவர்கள் சார்பாக தேர்தல் பிரச்சார அலுவலகமொன்றை நடாத்தி வருவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக சுகாதார அலுவலர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவேனெனவும், தேர்தல் சட்டங்களை மீறாத வகையிலும் நடாத்திச் செல்வேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

(அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர்/ முகவரின் பெயர்).................................................................

கையொப்பம் : .................................... திகதி :.................................... பதவி முத்திரை

### அலுவலகம் நிறுவப்படுகின்ற பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை

அலுவலக முகவரி: - ......................................................................

......................................................................

தேர்தல் பிரச்சார அலுவலகத்தினை நிறுவுவதோடு தொடர்புடைய வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் ..................... எனவும் அந்த வளவு எந்தவோர் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச்சட்ட நிறுவனத்திற்கோ உரித்தான ஒன்றல்ல எனவும் அறிவிக்கின்றேன்.

கிராம அலுவலர் கையொப்பம்............................... திகதி :......................

பதவி முத்திரை

**பிரதிகளை பெற்றுக் கொள்ளல்.**

| நிலையம் | பெற்றுக்கொண்டவரின் பெயர் / பதவி | கையொப்பம் | அலுவலக பதவி முத்திரை |
|---|---|---|---|
| மாவட்ட தேர்தல் அலுவலகம் ……………………. | …………………………………… | | |
| பொலிஸ் நிலையம் ……………………. | …………………………………… | | |
| சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ……………………... | …………………………………… | | |

**அறிவுறுத்தல்கள் :**

1. அலுவலகத்தை நிறுவ வேண்டிய விதமும் நடாத்திச் செல்ல வேண்டிய காலப்பகுதியும் வருமாறு:

| | | |
|---|---|---|
| **ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அறிவிக்கப்பட்ட கிளைத் தேர்தல் பிரச்சார அலுவலகம்** | **ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் தேர்தல் மாவட்டமொன்றுக்கு ஒன்று என்ற வீதம்** | **2020.08.04 ஆம் திகதி முதல் 2020.08.06 ஆம் திகதி நள்ளிரவு வரை** |

2. சுகாதார அலுவலர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

I வாய் மற்றும் மூக்கு ஆகியவை மூடப்படும் வகையிலான முகக்கவசம் அணிதல் வேண்டும்.

II தனியாள் இடைவெளி என்னும் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணுதல் வேண்டும்.

III சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவுதல் அல்லது கிருமிநீக்கத் திரவம் பயன்படுத்து கைகளைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

வேட்பாளரின் பெயர் :...........................................................................................

கட்சியின் பெயர்/ சுயேச்சைக் குழு இலக்கம் .......................................................

முகவரி : ....................................................................................................................

.................................................................................................................................

தொலைபேசி இலக்கம்.........................................................................................

(நிரப்ப முன்னர் பின்பக்கத்தின் அறிவுறுத்தல்களை நன்றாக வாசிக்கவும்.)

நான்கு பிரதிகளில் நிரப்பி ஒரு பிரதியை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கும், மற்றொரு பிரதி உரிய பொலிஸ் நிலையத்திற்கும், மூன்றாம் பிரதி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் கையளித்தல் வேண்டும். எஞ்சிய பிரதியை தேர்தல் பிரச்சார அலுவலகத்தில் வைத்திருத்தல் வேண்டும். .

2020.........................

**தெரிவத்தாட்சி அலுவலர்,** ..........................................................................மாவட்டம்

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் நிலையம், ..........................................................

சுகாதார வைத்திய அதிகாரி ..............................................................................................

| அலுவலக உபயோகத்திற்கு | |
|---|---|
| வாக்கெடுப்புப் பிரிவின் எழுத்து | வா.மா. இலக்கம் |
| | |

## பாராளுமன்றத் தேர்தல் - 2020
## தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நிறுவுதல்

1. அலுவலகத்தின் வகையீடு : **வேட்பாளரின் சாதாரண வதிவில்லம்**

2. அலுவலகத்தின் அமைவிடமும், உரிய காணியின் உரிமையும்.

2.1 வேட்பாளரின் சாதாரண வதிவிட முகவரி:.......................................................................

.................................................................................................................................

2.2 மேற்குறித்த முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு:.......................................................

2.3 அம்முகவரிக்குரிய வாக்கெடுப்பு நிலையம் :.......................................................................

2.4 அம்முகவரியின் உரித்துரிமை (குறித்த இடத்தின் உரிமையாளர்களாக இல்லாதவிடத்து)

(இந்த வளவு ஏதேனும் அரசாங்க நிறுவனத்திற்கோ /நியதிச் சட்ட நிறுவனத்திற்கோ உரித்தற்றதாதல் வேண்டும்.)

2.4.1 உரித்தாளியின் பெயர் : ............................................................................

2.4.2 அவரின் அஞ்சல் முகவரி: ............................................................................

2.4.3 உரித்தாளியின் தொலைபேசி இலக்கம் : வீடு- ..........................................கையடக்க- ..........................

3. **வெளிப்படுத்துகை**

மேற்குறித்த தகவல்கள் கூறப்பட்ட இடத்தில் தேர்தலுக்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவர் / சுயேச்சைக் குழுத் தலைவர் ஆகிய வணக்கத்திற்குரிய / திரு / திருமதி............................................................................ அவர்கள் சார்பாக தேர்தல் பிரச்சார அலுவலகமொன்றை நடாத்தி வருவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்காக சுகாதார அலுவலர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவேனெனவும், தேர்தல் சட்டங்களை மீறாத வகையிலும் நடாத்திச் செல்வேன் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

வேட்பாளரின் பெயர் :......................................................................................................

கட்சியின் / சுயேச்சைக்குழு தலைவரின் பெயர் :..............................................................

கையொப்பம் :.............................. திகதி: ........................... பதவி முத்திரை :

*** போட்டியிடுகின்ற வேட்பாளரால் இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.**

**அலுவலகம் நிறுவப்படுகின்ற பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கை**

அலுவலக முகவரி:.........................................................

.........................................................

தேர்தல் பிரச்சார அலுவலகத்தினை நிறுவுவதோடு தொடர்புடைய வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் ..................... எனவும் அந்த வளவு எந்தவோர் அரசாங்க நிறுவனத்திற்கோ / நியதிச்சட்ட நிறுவனத்திற்கோ உரித்தான ஒன்றல்ல எனவும் அறிவிக்கின்றேன்.

.................................................

கிராம அலுவலர் கையொப்பம் திகதி : ..................

பதவி முத்திரை

பிரதியைப் பெற்றுக் கொள்ளல்.

| நிலையம் | பெற்றுக்கொண்டவரின் பெயர் / பதவி | கையொப்பம் | அலுவலக பதவி முத்திரை |
|---|---|---|---|
| மாவட்ட தேர்தல் அலுவலகம் ....................... | ........................................... | | |
| பொலிஸ் நிலையம் ....................... | ........................................... | | |
| சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ....................... | ........................................... | | |

**அறிவுறுத்தல்கள் :**

1. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 73 ஆம் பிரிவில் தேர்தல்கள் அலுவலகங்களை நிறுவுவதற்கான சட்ட ஏற்பாடுகள் காட்டப்பட்டுள்ளன. உரியவாறு மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள் (இச்சந்தர்ப்பத்தில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - MOH அலுவலகம்) ஆகியவற்றிற்கு அறிவித்து அமைக்கப்படவுள்ள வேட்பாளரின் சாதாரண வதிவிடத்தில் அமைக்கப்படவுள்ள தேர்தல் பிரச்சார அலுவலகங்களில் கட்சியின் பெயர் (சுயேச்சைக் குழுவாயின் "சுயேச்சைக் குழு இலக்கம் -...." எனவும்) கட்சியின் / குழுவின் சின்னம் என்பன மாத்திரம் அடங்கிய ஒரேயொரு பெயர்ப் பலகை (பதாகை) காட்சிப் படுத்தப்படலாம். அப்பெயர்ப்பலகை ஒரு மொழியில் மாத்திரமெனின் 40 சதுர அடிகளை விஞ்சாதவாறு அமைதல் வேண்டுமென்பதுடன், இரு அரச மொழிகளையும் பயன்படுத்துவதாயின் (சிங்களம்/ தமிழ்) மேலதிகமாக 10 சதுர அடிகளைக் கூட்டிக் கொள்ளலாம்.

2. பொலிசார் அல்லது எவரேனும் அதிகாரி வருகை தந்து கோருகின்ற போது அலுவலகத்தை நிறுவுவதற்கென அனுமதியளிக்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கு மேலதிகமாக அதன் பிரதியொன்று அலுவலகத்தினுள் காட்சிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுமிடத்து, உரிய தேர்தல் பிரச்சார அலுவலகத்தை அகற்ற நடவடிக்கையெடுக்கப்படும்.

3. அலுவலகத்தை நிறுவ வேண்டிய விதமும் நடாத்திச் செல்ல வேண்டிய காலப்பகுதியும் வருமாறு:

| | | |
|---|---|---|
| **வேட்பாளரின் சாதாரண வதிவில்லம்.** | **ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும்** | **2020.06.10ஆம் திகதி முதல் 2020.08.06ஆம் திகதி நள்ளிரவு வரை** |

4.. வேட்பாளரின் வதிவில்லத்தை தேர்தல் அலுவலகமாகப் பயன்படுத்த முடியும். அதே போன்று வேட்பாளரின் இல்லம் சனச்செறிவு மிக்க இடமொன்றில் அமைந்திராதவிடத்து, தெரிவத்தாட்சி அலுவலரிடம் முன்வைக்கப்படுகின்ற எழுத்து மூலக் கோரிக்கையொன்றைக் கருத்திலெடுத்து, வீடு அமையப பெற்றுள்ள கிராம அலுவலர் பிரிவிற்குள் காணப்படுகின்ற சனச்செறிவு மிக்க இடமொன்றில் அமையப் பெற்றுள்ள வேறொரு கட்டிடத்தை அதற்காகப் பயன்படுத்திக் கொள்ள அனுமதியளிக்கப்படும்.

5. இத்தகைய வேட்பாளரின் சாதாரண வதிவில்லத்தில் அமையப்பெறும் அலுவலகமொன்று வாக்கெடுப்பு நிலையமொன்றிலிருந்து 500 மீற்றருக்குள் அமையப் பெற்றிருப்பின் அதனை 2020.08.03 ஆம் திகதி நள்ளிரவிற்கு முன்னர் அகற்றுதல் வேண்டும்.

6. ஏதேனுமொரு கட்சி / குழுவுக்காக நிறுவப்படுகின்ற அலுவலகத்திற்குள் வேறொரு கட்சி / குழுவின் வேட்பாளரது பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது.

7. சுகாதார அலுவலர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

    I வாய் மற்றும் மூக்கு ஆகியவை மூடப்படும் வகையிலான முகக்கவசம் அணிதல் வேண்டும்.

    II தனியாள் இடைவெளி என்னும் ஒரு மீட்டர் இடைவெளியைப் பேணுதல் வேண்டும்.

    III சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவுதல் அல்லது கிருமிநீக்கத் திரவம் பயன்படுத்தி கைகளைச் சுத்தம் செய்தல் வேண்டும்.